සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/05/MF/08/01-චක්‍රලේඛ | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2025.07.08 |
|---|---|---|---|---|---|

## சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் - 2025 / 08

அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக் கட்டுப்பாட்டுச் சபை /
வங்கிச்சங்க நிறைவேற்று குழு தலைவர்கள்,
அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச்சங்க முகாமையாளர்கள்,
அனைத்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும்
அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் (வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு பதில் கடமையாற்றும்)

### சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் / வங்கிச் சங்கங்கள் மற்றும் களக்கடமை பணிக்குழுவினர் விசேட மாதாந்த கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கல்.

**01. அறிமுகம் :-**

குறைந்த வருமானம் பெறுவோர் உள்ளிட்ட அனைத்து வாடிக்கையாளர்களினதும் வைப்புகள் மற்றும் கடன்கள் உட்பட நிதிசார் சேவைகளை குறையில்லாமல் வழங்குதல், நுண்நிதித் துறையில் ஈடுபட்டுள்ள ஏனைய நிதி நிறுவனங்களுடனான போட்டியில் வெற்றிபெறல் மற்றும் இலக்கிடப்பட்ட மக்களை வலுவூட்டுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல் போன்ற தனித்துவமான செயற்பாடுகளை வங்கி மற்றும் வங்கிச் சங்க பணிக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமைகளில் வைப்புகளை சேகரித்தல், கடன்களை விடுவித்தல் மற்றும் கடன்களை அறவீடு செய்தல் போன்றவற்றில் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அந்த சவால்களை வெற்றி கொன்டு சமுர்த்தி வங்கிகளினுடாக வழங்கப்படும் நிதிச் சேவைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு வங்கிப் பணிக்குழுவினர் அர்ப்பணிப்பு மற்றும் உற்சாகத்துடன் பணியாற்றி வருகின்றனர். எனவே, வங்கி, வங்கிச்சங்க மற்றும் களக்கடமை பணிக்குழுவினர் மத்தியில் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் மேலும் அதிகரிப்பதற்கு அவர்களுக்கு நிதி மற்றும் நிதி சாராத நன்மைகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான வழிகாட்டல்களை வழங்கும் பொருட்டு சமுர்த்தி வங்கி மற்றும் வங்கி சங்க முகாமைத்துவ சபையின் 2025.06.17 ஆம் திகதிய **2025/136/06** இலக்க அனுமதிக்கு அமைய இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02. இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் மூலம் 2024.07.22 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2024/10 இலக்க சுற்றறிக்கை மற்றும் 2024.09.05 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2024/10 இற்கான முதலாவது பிற்சேர்க்கை மற்றும் 2024.10.28 இல் வெளியிடப்பட்ட அதன் இரண்டாவது பிற்சேர்க்கை என்பன இத்தால் ரத்துச் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

03. இச்சுற்றறிக்கை மூலமான மேற்குறித்த கொடுப்பனவு ஒரு நிதி நிறுவனத்தின் **உத்தியோகத்தராக ஒருவர் சேவையாற்றும் போது அவர் முகம் கொடுக்கும் இடர்களுக்கான** ஒரு இழப்பீடாகவும், மற்றும் உரிய உத்தியோகத்தர் வங்கி / வங்கிச் சங்கத்தின் நிதிச் சேவையினை முறையாக மக்களுக்கு வழங்குவதற்கு ஆற்றிய பங்களிப்பின் அளவினை பாராட்டும் வகையிலுமே வழங்கப்படுகிறது

**04. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் களக்கடமை பணிக்குழுவினருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கல்.**

இந்த இடர் கொடுப்பனவுகளை வழங்கும் போது 2025 ஜுன் மாதத்தில் இருந்து கீழ்வரும் ஆலோசனைகளை பின்பற்றுதல் வேண்டும்.

4.1 நிதித்துறையில் கடமைகளை மேற்கொள்ளும் போது முகம் கொடுக்கும் இடர்களை கவனத்தில் கொண்டு வழங்கப்படும் நிலையான மாதாந்தக் கொடுப்பனவு.

| | |
|---|---|
| முகாமையாளர் | ரூ. 7500/= |
| உதவி முகாமையாளர் | ரூ 6000/= |
| புத்தகக் காப்பாளர் / கணக்கு எழுதுனர் i மற்றும் ii / காசாளர் (பொறுப்பாளர்) | ரூ. 4500/= தலா |
| வலய / கள உதவியாளர். | ரூ. 3000/= |
| கள உத்தியோகத்தர்கள் | ரூ. 2400/= தலா |

4.1.1 ஒரு வங்கி கவனத்தில் கொள்ளப்படும் ஆண்டுக்கு முந்திய ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூ. 2 மில்லியனுக்கும் அதிகமான இலாபத்தை ஈட்டியிருப்பின் மேற்குறித்த முழுத் தொகையினையும் கொடுப்பனவாக பெற்றுக்கொள்ள முடியும்.

4.1.2 ஒரு வங்கி கவனத்தில் கொள்ளப்படும் ஆண்டுக்கு முந்திய ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூ. 2 மில்லியன் அல்லது ரூ. 2 மில்லியனுக்கு குறைவான இலாபத்தை ஈட்டியிருப்பின் மேற்குறித்த கொடுப்பனவில் அரைவாசியினை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும்.

4.1.3 ஒரு வங்கி நட்டமடைந்திருப்பின் அந்த நட்டம் ரூபா 01 மில்லியனை விட குறைவாக இருப்பின் மேற்குறித்த கொடுப்பனவில் மூன்றில் ஒரு பங்கினை மட்டுமே பெற முடியும்.

4.1.4 நட்டம் ரூ. 01 மில்லியன் அல்லது அதனை விட அதிகம் எனின் எந்த கொடுப்பனவும் செலுத்தப்பட மாட்டாது.

4.1.5 நட்டடமடைந்துள்ள வங்கிகள் 2025 ஆம் ஆண்டிற்கு மாத்திரமே இக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக இச் சுற்றறிக்கையின் 6-XII தொடர்பாக கவனம் செலுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தல் வேண்டும்.

**4.2 சம்பாத்தியத்தை பெற்றுக் கொள்வதற்கான நியதிகள் (அளவுகோல்).**

4.2.1 வங்கி உழைத்த செயற்பாட்டு ரீதியான தேறிய இலாபத்தை ( a எனக் கொண்டால்) அதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கவேண்டிய முறை கீழ்வருமாறு அமையும். இக்கொடுப்பளவு வங்கிப் பணிக் குழுவினர், வலய உதவியாளர் மற்றும் களஉத்தியோகத்தர்கள் ஆகிய அனைவருக்கும் ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| I. ரூ. மில். $5 \leq a < 10$ எனின் | ரூ. 500/= |
| II. ரூ. மில். $10 \leq a < 15$ எனின் | ரூ. 1,000/= |
| III. ரூ. மில். $15 \leq a < 20$ எனின் | ரூ. 1,500/= |
| IV. ரூ. மில். 20 அல்லது அதனைவிட அதிகம் எனின் | ரூ. 2,000/= |

**4.2.2 வைப்புகளுக்கான கடன் வீதம்**

**4.2.2.1 வங்கிப் பணிக்குழுவினர் மற்றும் வலய உதவியாளருக்கான கொடுப்பனவு.**

இவ்வீதத்தினை கணிப்பிடும்போது வங்கியின் அனைத்து வைப்புக்களினதும் செயற்படுகின்ற மற்றும் செயற்படாத கணக்கு மீதிகள் (கட்டாய சேமிப்பு, தனசக்தி, நிலையான வைப்புகள் உட்பட) மற்றும் நுகர்வுக் கடனுக்காக

தேக்கி வைத்த 60% கூட்டுக் காப்பீட்டு நிதியக் கணக்கு (4015), கிராமிய கடன் தேவைகளை பூரணப்படுத்துவதற்கான நிதியக் கணக்கு (4033), வாழ்வாதார அபிவிருத்தி சுழற்சி நிதியத்திற்கு வழங்கப்பட்ட நிதியக் கணக்கு (4041), கைவிடப்பட்ட வைப்புக் கணக்கு (4057), உரிமை கோரப்படாத / கட்டாய சேமிப்பு வைப்புக் கணக்கு (4059), ஆகிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகையும் மொத்த வைப்பாக கருதப்படல் வேண்டும். வெளியில் உள்ள கடன்களாக அறவிடவேண்டியுள்ள நுகர்வுக் கடன் கணக்கு (3104), அறவிட வேண்டியுள்ள வாழ்வாதார சுழற்சி நிதிய கடன் கணக்கு (3113), வங்கிச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ஊழியர் மீள்நிதியீட்ட கடன் கணக்கு (3191), வங்கி / வங்கிச் சங்க கட்டிட நிர்மாணத்துக்காக வங்கிச் சங்கங்கத்திற்கு வழங்கிய நிதியக் கணக்கு (3192) ஆகிய கணக்குகளின் மீதிகள் உட்பட ஏனைய அறவிட வேண்டியுள்ள அனைத்து கடன்களினதும் மீதிகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். அறவிடவேண்டியுள்ள கடன் தொகையினை b எனக் கொண்டால்

I. வைப்புகளுக்கும் அறவிடவேண்டியுள்ள கடன்களுக்குமான வீதம் 40.00% - 59.99% ஆகவும், அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். $75 \leq b < 100$ இற்கும் இடைப்பட்டதாயின் கொடுப்பனவு ரூ. 500/= ஆகும்.

II. வைப்புகளுக்கும் அறவிடவேண்டியுள்ள கடன்களுக்குமான வீதம் 60.00% - 79.99% ஆகவும், அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். $100 \leq b < 150$ இற்கும் இடைப்பட்டதாயின் கொடுப்பனவு ரூ. 1000/= ஆகும்.

III. வைப்புகளுக்கும் அறவிடவேண்டியுள்ள கடன்களுக்குமான வீதம் 80.00% - 89.99% ஆகவும், அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். $150 \leq b < 200$ இற்கும் இடைப்பட்டதாயின் கொடுப்பனவு ரூ. 1500/= ஆகும்.

IV. வைப்புகளுக்கும் அறவிடவேண்டியுள்ள கடன்களுக்குமான வீதம் 90% அல்லது அதனை விட அதிகமாகவும், அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். 200 அல்லது அதனை விட அதிகம் எனின் கொடுப்பனவு ரூ. 2000/= ஆகும்.

**4.2.2.2 களத்தில் கடமையாற்றும் பணிக்குழுவின்ருக்கான கொடுப்பனவு.**

களத்தில் கடமையாற்றும் பணிக்குழுவினருக்கு உரிய ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்கும் போது கீழ் குறிப்பிடும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இங்கு கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் வைப்புகளுக்கான கடன் வீதத்தினை கணிப்பிடும்போது பொதுப் பேரேட்டு குறியீட்டு இலக்கம் 4015, 4033, 4041, 4057, 4059 ஆகிய பொதுப்பேரேட்டுக் கணக்குகளில் உள்ள கடன் மீதிகளின் கூட்டுத்தொகையினை வங்கியின் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கையால் பிரித்து பெறும் மீதியினையும், கிராம சேவையாளர் பிரிவில் வைப்புகளுக்காக சேகரித்த தொகையினையும் கணிப்பீடு செய்தல் வேண்டும்.

இச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வைப்புகளுக்கான கடன் வீதத்தினை கணிப்பீடு செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறே கணிப்பிடுதல் வேண்டும். வெளியில் உள்ள அறவிடவேண்டிய கடள் தொகையினை C என கருதினால்

I. வைப்புகளுக்கான கடன் விகிதம் 40.00% - 59.99% ஆகவும், அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். $7.5 \leq C < 10$ எனின் கொடுப்பனவு. ரூ. 500/= ஆகும்.

II. வைப்புகளுக்கான கடன் விகிதம் 60.00% - 79.99% ஆகவும், அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். $10 \leq C < 15$ எனின் கொடுப்பனவு. ரூ. 1000/= ஆகும்.

III. வைப்புகளுக்கான கடன் விகிதம் 80.00% - 89.99% ஆகவும், அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். $15 \leq C < 20$ எனின் கொடுப்பனவு. ரூ. 1500/= ஆகும்.

IV. வைப்புகளுக்கான கடன் விகிதம் 90.00% அல்லது அதனை விட அதிகமாகவும் அறவிடவேண்டியுள்ள கடன் தொகை மில். 20 அல்லது அதனைவிட அதிகம் எனின் கொடுப்பனவு ரூ. 3000/= ஆகும்.

**4.2.2.3 இரண்டு அளவுகோல்களையும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் கொடுப்பனவினை வழங்கும் விதம்.**

4.2.2.1 மற்றும் 4.2.2.2 ஆகிய சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்வதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அந்தந்த விடயங்களுக்கான அளவுகோல்கள் (நியதிகள்) இரண்டினையும் ஒரே தடவையில் பூர்த்தி செய்ய முடியாதிருப்பின் பூர்த்தி செய்துள்ள குறைந்தபட்ச தகுதியினை அடிப்படையாக வைத்து கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

**உதாரணமாக** :- ஒரு சமுர்த்தி வங்கியில் 210 மில்லியன் அறவிடவேண்டிய கடன் தொகையும் அத்துடன் வைப்புகளுக்கான கடன் விகிதம் 62.01% ஆகவும் காணப்படின் வங்கிக்கு உரித்தான கொடுப்பனவு ரூ.1000 ஆகும். கள உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவும் இதே விதத்தில் அமைத்தல் வேண்டும்.

### 4.2.3 செயற்படாத கடன்கள் (Non Performing Loans)

இக் கொடுப்பனவுத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு ஒரு சமுர்த்தி வங்கியின் அறவிடவேண்டிய வெளியில் உள்ள கடன் தொகை ரூ.100 மில்லியனுக்கும் அதிகமாக இருப்பதுடன் வைப்புகளுக்கான கடன் வீதம் 60% க்கும் அதிகமானதாக இருத்தல் வேண்டும். இந்த 02 நிபந்தனைகளும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்யப்பட்டால் வங்கி ஊழியர்களுக்கு (வலய உதவியாளர் உட்பட) கீழ் குறிப்பிடும் விதத்தில் கொடுப்பனவினை வழங்க முடியும்.

கள உத்தியோகத்தர்களுக்கு இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவினை வழங்கும் போது அவர்களின் வெளியிலுள்ள அறவிடவேண்டிய கடன் தொகை ரூ.10 மில்லியனுக்கும் அதிகமாக இருப்பதுடன் வைப்புகளுக்கான கடன் வீதம் 60% க்கும் அதிகமாக இருத்தல் வேண்டும். அத்துடன் இந்த இரண்டு நிபந்தனைகளையும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன்

| | |
|---|---|
| I. செயற்படாத கடன் வீதம் 2.01% - 3.00 % எனின் | ரூ. 500/= |
| II. செயற்படாத கடன் வீதம் 1.01% - 2.00 % எனின் | ரூ. 1000/= |
| III. செயற்படாத கடன் வீதம; 0.01% - 1.00 % எனின் | ரூ. 1500/= |
| IV. செயற்படாத கடன் வீதம் 0 எனின் | ரூ. 2000/= |
| V. செயற்படாத கடன்வீதம் 3.01% - 10.00 % எனின் எந்ததொகையும் கூட்டவோ கழிக்கப்படவோ மாட்டாது. | |
| VI. செயற்படாத கடன் வீதம் 10.01% - 15.00 % எனின் | (ரூ. 500/=) |
| VII. செயற்படாத கடன் வீதம் 15.01% - 20.00 % எனின் | (ரூ. 1000/=) |
| VIII. செயற்படாத கடன் வீதம் 20.01% அல்லது அதனை விட அதிகம் எனின் | (ரூ. 2000/=) |

அடைப்புக்குறிக்குள் உள்ள அனைத்து எதிர்மறை வருமானத் தொகைகளும் (உ+ம் : மேலே VI, VII, VIII) அவர்கள் சம்பாதிக்கும் தொகையிலிருந்து கழிக்கப்பட வேண்டிய ஒரு பெறுமதியாகும். எதிர்மறை பெறுமதிகள் சம்பாதித்த வருவாயிலிருந்து கழிக்கப்பட்டாலும் அந்த கழிப்பீடுகள் இடர் கொடுப்பனவை பாதிக்கக்கூடாது. அதாவது 4.1 இல் உள்ள இடர் கொடுப்பனவு குறைக்கப்படாமல் செலுத்தப்படல் வேண்டும்.

### 4.2.4 காலங்கடந்த கடன் விகிதத்தைக் கணக்கிட்டு அதற்கு வழங்கப்படும் மேலதிகக் கொடுப்பனவு.

இந்த கொடுப்பனவைப் பெற ஒரு சமுர்த்தி வங்கியின் வெளியே அறவிடவேண்டியுள்ள கடன் நிலுவைத் தொகை 100 மில்லியனுக்கும் அதிகமான இருப்பதுடன் வைப்புகளுக்கான கடன் வீதம; 60% க்கும் மேல் இருத்தல் வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்யப்பட்டால் வங்கி ஊழியர்களுக்கு (வலய உதவியாளர் உட்பட) கீழ் குறிப்பிடும் விதத்தில் கொடுப்பனவுகளை வழங்கலாம்.

கள ஊழியர்களுக்கு இந்த ஊக்குவிப்பு தொகையை வழங்கும் போது ஒரு கள உத்தியோகத்தரின் நிலுவைக் கடன் தொகை ரூ.10 மில்லியனுக்கும் மேல் இருப்பதுடன் அவரது வைப்புகளுக்கான கடன் வீதம் 60% க்கும் அதிகமாக இருத்தல் வேண்டும்.

காலங்கடந்த கடன்களை கணக்கிடும்போது ஏதேனும் காலதாமதமான கடன்கள் இருந்தால் (Time Expired) அதனையும் காலங்கடந்த கடன் தொகையுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். இங்கு 03 - 08 க்கு இடைப்பட்ட தவணைகள் செலுத்தாமல் காலதாமதமாகி உள்ள கடன்களின் மொத்த கூட்டுத்தொகை அறவிடவேண்டியுள்ள கடன் தொகையில் என்ன வீதமாக உள்ளது என்பதை கணக்கிடல் வேண்டும். இந்த வீதமானது

I. 0.00% எனின் ரூ. 1500/=

II. 0.01% - 5.00மூ எனின். ரூ. 1000/=

III. 5.01% - 10.00மூ எனின். ரூ. 500/=

IV. 10.01% - 15.00மூ எனின் எந்தத் தொகையும் கூட்டவோ கழிக்கப்படவோ மாட்டாது.

V. 15.01% - 20.00மூ எனின். (ரூ. 500/=)

VI. 20.01% விட அதிகம் எனின். (ரூ. 1500/=)

இவ் விதாசாரம் கிராம சேவகர் பிரிவு மட்டத்திலும் மற்றும் வலய மட்டத்திலும் கணிக்கப்படல் வேண்டும்.

#### 4.2.5 வைப்புத்தொகை அதிகரிப்பிற்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு.

இந்த வீதம் முந்திய ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் கட்டாய சேமிப்பு தவிர்த்த ஏனைய செயற்படும் மற்றும் செயற்படாத வைப்புத் தொகைகளின் திரண்ட மொத்த பெறுமதியை (A) அடிப்படை ஆண்டாக கொண்டு கொடுப்பனவை பெறும் மாதத்தில் கட்டாய சேமிப்பை தவிர்த்து ஏனைய வைப்புக்களின் செயற்படும் மற்றும் செயற்படாத வைப்புத் தொகைகளின் திரண்ட மொத்த பெறுமதியை (B) எனக்கொண்டு> B - A க்கு இடையிலான வேறுபாட்டை அடிப்படை ஆண்டின் பெறுமதி (A) ஆல் வகுப்பதன் மூலம் இந்த விகிதம் கணக்கிடப்படும்.

* இங்கு திரண்ட மொத்த பெறுமதிக்கு அமைய கணக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

$$\frac{B-A}{A} \times 100 \quad \frac{\times 12}{\text{மாதங்களின் எண்ணிக்கை}}$$

$$\frac{B-A}{A} \times 100 \quad \frac{\times 12}{1,2,3,4,5,6,7,8,9,10,11,12}$$

1 மாதம்

$$\frac{B-A}{A} \times 100 \quad \frac{\times 12}{1}$$

6 மாதங்கள்

$$\frac{B-A}{A} \times 100 \quad \frac{\times 12}{6}$$

10 மாதங்கள்

$$\frac{B-A}{A} \times 100 \quad \frac{\times 12}{10}$$

12 மாதங்கள்

$$\frac{B-A}{A} \times 100 \quad \frac{\times 12}{12}$$

| மாதம் | 1% மாதாந்த அதிகரிப்பு | 3% மாதாந்த அதிகரிப்பு | 5% மாதாந்த அதிகரிப்பு | 10% மாதாந்த அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| ஜனவரி | 0.08 | 0.25 | 0.42 | 0.83 |
| பெப்ரவரி | 0.17 | 0.5 | 0.83 | 1.67 |
| மார்ச் | 0.25 | 0.75 | 1.25 | 2.50 |
| ஏப்ரல் | 0.33 | 1 | 1.67 | 3.33 |
| மே | 0.42 | 1.25 | 2.08 | 4.17 |
| ஜுன் | 0.5 | 1.50 | 2.50 | 5 |
| ஜுலை | 0.58 | 1.75 | 2.92 | 5.83 |
| ஓகஸ்ட் | 0.67 | 2 | 3.33 | 6.67 |
| செப்டம்பர் | 0.75 | 2.25 | 3.75 | 7.50 |
| ஒக்டோபர் | 0.83 | 2.50 | 4.17 | 8.33 |
| நவம்பர் | 0.92 | 2.75 | 4.58 | 9.17 |
| டிசம்பர் | 1 | 3 | 5 | 10 |

கிராம சேவையாளர் பிரிவின் வைப்புத்தொகையைக் கணக்கிடும்போது பொதுப் பேரேட்டில் உள்ள 4057 கணக்கின் மீதியினை கிராம சேவையாளர் பிரிவின் எண்ணிக்கையினால் வகுத்து பெறப்படும் பெறுமதியினை பிரிவின் சேமிப்பு

மீதியுடன் சேர்த்து கிராம சேவையாளர் பிரிவின் மொத்த வைப்புத் தொகையினை கணக்கிடல் வேண்டும். அதன்படி ஆண்டு வைப்புத்தொகையின் வளர்ச்சி விகிதம்,

| | |
|---|---|
| I. 1.00% - 2.99% க்கு இடையில் எனின் | ரூ. 500/= |
| II. 3.00% - 4.99% க்கு இடையில் எனின் | ரூ. 1000/= |
| III. 5.00% - 9.99% க்கு இடையில் எனின் | ரூ. 1500/= |
| IV. 10.00% அல்லது அதனை விட அதிகம் எனில் | ரூ. 2000/= |

இதற்கமைய கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் வைப்புகளின் வருடாந்த அதிகரிப்பு வீதத்திற்கு ஏற்ப கொடுப்பனவினை பெற்றுக் கொள்ள முடியும். வைப்புக்களின் வருடாந்த அதிகரிப்பினை கணிப்பிடும்போது மேற்குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்த அதிகரிப்புகளை கணிப்பீடு செய்து கொடுப்பனவினை வழங்க முடியும்.

**உதாரணம் :- 2025** மே மாதம் வைப்புக்களின் அதிகரிப்பு வீதத்தினை கணித்து கிடைக்கப்பெற்ற பெறுமதி **1.25** எனின் பெற்றுக் கொள்ளக்கூடிய கொடுப்பனவு ரூ. **1000.00** ஆகும். அதிகரிப்பு வீதம் **2.08** எனின் பெற்றுக் கொள்ளக் கூடிய கொடுப்பனவு ரூ. 1500.00 ஆகும். அதிகரிப்பு வீதம் **4.17** எனின் பெற்றுக் கொள்ளக்கூடிய கொடுப்பனவு ரூ.**2000.00** ஆகும்.

**4.2.6 கள உத்தியோகத்தர்களுக்கான விசேட கொடுப்பனவு.**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் முன்னேற்றத்திற்கு கள உத்தியோகத்தர்கள் விசேடமான பல கருமங்களை ஆற்றுவதுடன், வங்கியின் சார்பாக பொறுப்புகளையும் வகிக்கிறார்கள். எனவே, கள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் என்ற வகையில் பின்வரும் விதத்தில் விசேட கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

நியதிகள் (அளவுகோல்) :-

- அறவிட வேண்டியுள்ள கடன் தொகை 40 மில்லியனை விட அதிகமாகவும்
- காலம் கடந்த கடன் வீதம் 5% அல்லது அதனை விட குறைவாகவும்
- செயற்படாத கடன்கள் (ரீடு) 3% அல்லது அதனை விட குறைவாகவும் இருப்பின்

மாதாந்த கொடுப்பனவு :-

4.2.2.2 (IV) இற்கு அமைய உயர்ந்த பட்ச கொடுப்பனவுத் தொகை ரூ. 3000/- ஆகும். அறவிட வேண்டியுள்ள கடன் தொகையை கவனத்தில் கொண்டு மேற்குறித்த கொடுப்பனவுக்கு மேலதிகமாக கீழ்வரும் விதத்திலான கொடுப்பனவும் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். வெளியில் உள்ள அறவிடவேண்டிய கடன் தொகை **d** எனில்

| | |
|---|---|
| I. மில். $30 \leq d < 40$ எனின் | ரூ. 1000/= |
| II. மில். $40 \leq d < 50$ எனின் | ரூ. 2000/= |
| III மில். $50 \leq d < 60$ எனின் | ரூ. 3000/= |
| IV. மில். 60 அல்லது அதனை விட அதிகம் எனின் | ரூ. 5000/= |

**4.2.7 உத்தியோகத்தர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மாதத்திற்கான உயர்ந்தபட்ச கொடுப்பனவு.**

| | |
|---|---|
| முகாமையாளர் | ரூ. 17,000/= |
| உதவி முகாமையாளர் | ரூ. 15,500/= |
| புத்தகக் காப்பாளர்<br>கணக்கு எழுதுனர் 1<br>கணக்கு எழுதுனர் 2<br>காசாளர். | ரூ. 14,000/= தலா |
| வலய உதவியாளர். | ரூ. 12,500/= |
| கள உத்தியோகத்தர்களுக்கு | ரூ. 17,900/= தலா |

**05. வங்கி சங்கங்களுக்குரிய ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கல்.**

5.1 நிதி நிறுவனம் ஒன்றில் கடமைகளை மேற்கொள்ளும் போது முகங்கொடுக்கும் இடர்களை கவனத்தில் கொண்டு வழங்கப்படும் நிலையான கொடுப்பனவு.

| | | |
|---|---|---|
| முகாமையாளர் | ரூ. 8,100/= | |
| உதவி முகாமையாளர் | ரூ .6,600/= | |
| கருத்திட்ட முகாமையாளர். | ரூ. 6,600/= | |
| ஏனைய பணிக்குழுவினருக்கு | ரூ .4,200/= | தலா ஒரு உத்தியோகத்தருக்கு |

(உம் :- நிர்வாக உதவியாளர், கணக்கு / நிதி உதவியாளர், கருத்திட்ட உதவியாளர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் ஏனைய பணிக்குழுவினர் என்பதற்குள் உள்ளடக்கப்படுவர்)

5.1.1 ஒரு வங்கிச் சங்கம் கவனத்தில் கொள்ளப்படும் ஆண்டுக்கு முந்திய ஆண்டில் ரூ. 02 மில். அல்லது அதனை விட அதிகமான இலாபத்தை பெற்றிருப்பின் மேற்குறித்த தொகையினை முழுமையாக வழங்க முடியும்.

5.1.2 ஏதேனும் ஒரு வங்கிச் சங்கம் கவனத்தில் கொள்ளப்படும் ஆண்டுக்கு முந்திய ஆண்டில் ரூ. 02 மில்லியனுக்கும் குறைவான இலாபத்தை பெற்றிருப்பின் மேற்படி நிரந்தர கொடுப்பனவில் அரைவாசி மாத்திரமே உரித்தாகும்.

5.1.3 ஏதேனும் ஒரு வங்கிச் சங்கம் கவனத்தில் கொள்ளப்படும் ஆண்டிற்கு முந்திய ஆண்டில் ரூபா ஒரு மில்லியன் தொகைக்கு குறைவாக நட்டமடைந்திருப்பின் அவர்களுக்கு மேற்குறித்த கொடுப்பனவில் மூன்றில் ஒரு பங்கு மாத்திரமே உரித்தாகும்.

5.1.4 நட்டம் அடைந்த நிலையில் இருக்கும் வங்கிச் சங்கங்கள் இன் நிரந்தர கொடுப்பனவை 2025 ஆம் ஆண்டுக்கு மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும்.

5.2 நட்டமடைந்துள்ள தொகை ஒரு மில்லியன் அல்லது அதனை விட அதிகம் எனின் இன்நிலையான இடர் கொடுப்பனவு உரித்தாகாது. இருந்தும் அவ்வாறான வங்கிச் சங்கங்கள் சம்பாத்தியங்களை பெற்றுக் கொள்வதற்கான நியதிகளை (அளவுகோல்களை) பூர்த்தி செய்யும் சந்தர்ப்பங்களில் அந்தந்த விடயத்திற்கு உரித்தான கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

**5.3. சம்பாதித்து பெற்றுக் கொள்வதற்கான நியதிகள் (அளவுகோல்கள்).**

**5.3.1 வங்கிச் சங்கம் உழைத்த செயற்பாட்டு ரீதியான தேறிய இலாபத்திற்கு அமைய (தேறிய இலாபம் e எனின்)**

| | |
|---|---|
| I. ரூ. மில். $5 \leq e < 10$ எனின் | ரூ. 1,000/= |
| II. ரூ. மில். $10 \leq e < 15$ எனின் | ரூ. 1,500/= |
| III. ரூ. மில். $15 \leq e < 20$ எனின் | ரூ. 2,500/= |
| IV. ரூ. மில். 20 அல்லது அதனைவிட அதிகம் எனின் | ரூ. 3,500/= |

**5.3.2 வெளியில் உள்ள அறவிடவேண்டிய கடன் தொகைக்கு அமைய (இக்கடன் தொகை f எனின்) வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு**

| | |
|---|---|
| I. மில். $50 \leq f < 75$ எனின் | ரூ. 500/= |
| II. மில். $75 \leq f < 100$ எனின் | ரூ. 1,000/= |
| III. மில். 100 அல்லது அதனைவிட அதிகம் எனின் | ரூ. 1,500/= |

**5.3.3 செயற்படாத கடன்களுக்கான (Non Performing Loans) மேலதிக கொடுப்பனவு.**

இக் கொடுப்பனவுத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு அறவிடவேண்டிய வெளியில் உள்ள கடன் தொகை ரூ. 75 மில்லியனுக்கும் அதிகமாக இருத்தல் வேண்டும். அத்துடன் செயற்படாத கடன்களின் வீதம் அதிகரிக்குமாயின் நேர்மறை பொறுமதித் தொகை கொடுப்பனவாக கணக்கிடப்பட்டு அத்தொகை அவர் உழைத்த சம்பாத்தியத்தில் இருந்து கழிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| I. | செயற்படாத கடன் வீதம்; 2.01% - 3.00 % எனின் | ரூ. 500/= |
| II. | செயற்படாத கடன் வீதம் 1.01% - 2.00 % எனின் | ரூ. 1000/= |
| III. | செயற்படாத கடன் வீதம் 0.01% - 1.00 % எனின் | ரூ. 1500/= |
| IV. | செயற்படாத கடன் வீதம் 0 எனின் | ரூ. 2000/= |
| V. | செயற்படாத கடன் வீதம் 3.01% - 10.00 % எனின் எந்தத் தொகையும் கூட்டவோ கழிக்கப்படவோ மாட்டாது. | |
| VI. | செயற்படாத கடன் வீதம் 10.01% - 15.00 % எனின் | (ரூ. 500/=) |
| VII. | செயற்படாத கடன் வீதம் 15.01% - 20.00 % எனின் | (ரூ. 1000/=) |
| VIII. | செயற்படாத கடன் வீதம் 20.01% அல்லது அதனை விட அதிகம் எனின் | (ரூ. 1500/=) |

மேலேVI, VII, VIII ஆகிய அடைப்புக்குறிக்குள் உள்ள அனைத்து எதிர்மறை வருமானத் தொகைகளும் அவர்கள் சம்பாதிக்கும் தொகையிலிருந்து கழிக்கப்படல் வேண்டும். ஆனால் எதிர்மறையான சம்பாத்தியங்கள் அதிகமாக இருப்பினும் அதனை இடர் கொடுப்பனவில் இருந்து கழிப்பீடு செய்யக்கூடாது.

**5.3.4 காலங்கடந்த கடன் விகிதத்திற்கு அமைய வழங்கப்படும் மேலதிகக் கொடுப்பனவு.**

இந்த கொடுப்பனவைப் பெற வெளியில் அறவிடவேண்டியுள்ள கடன் நிலுவைத் தொகை 75 மில்லியனுக்கும் அதிகமாக இருத்தல் வேண்டும். இவ்வீதத்தினை கணிப்பிடும்போது 03 அல்லது 03 இற்கு மேற்பட்ட தவணைகள் செலுத்தாமல் காலதாமதமாகியுள்ள கடன்களின் மொத்த கூட்டுத்தொகையும் காலங்கடந்த கடன் தொகையாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

காலங்கடந்த கடன் வீதம்

| | | |
|---|---|---|
| I. | 0.00% எனின் | ரூ. 1,500/= |
| II. | 0.01% - 5.00% எனின். | ரூ. 1,000/= |
| III. | 5.01% - 10.00% எனின். | ரூ. 500/= |
| IV. | 10.01% - 15.00% எனின் எந்தத் தொகையும் கூட்டவோ கழிக்கப்படவோ மாட்டாது. | |
| V. | 15.01% - 20.00% எனின். | (ரூ. 500/=) |
| VI. | 20.01% விட அதிகம் எனின். | (ரூ. 1,000/=) |

**5.4 வங்கிச் சங்க உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச மாதாந்த கொடுப்பவுத் தொகை.**

| | |
|---|---|
| முகாமையாளர் | ரூ. 16,600 |
| உதவி முகாமையாளர் | ரூ. 15,100 |
| கருத்திட்ட முகாமையாளர் | ரூ 15,100 |
| ஏனைய பணிக்குழுவினர் தலா | ரூ 12,700 |

**06. இக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.**

I. தற்போது சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு (Development Officers) இக்கொடுப்பனவு உரித்தாகாது. ஆனால் நிரந்தர பணிக்குழுவில் வெற்றிடம் ஒன்று காணப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமைக்கு / கடமை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்படும்போது நிரந்தர பணிக்குழுவினருக்கு உரித்தான கொடுப்பனவு இவ் உத்தியோகத்தருக்கும் உரித்தாகும்.

II. ஒரு உத்தியோகத்தர் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக இன்னும் ஒரு பதவியில் பதில் கடமையாற்றும் போது அதற்கான தகமைகளை பூர்த்தி செய்திருந்தால் அவருக்கு அதற்கான கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். இருப்பினும் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளில் பதில் கடமையாற்றும் சந்தர்ப்பங்கள் காணப்படின்

தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஒரு பதில் கடமையாற்றும் பதவிக்கு மாத்திரமே இம்மாதந்த கொடுப்பினை பெற்றுக்கொள்ள இடம் அளிக்கப்படுகிறது.

III. யாரேனும் உத்தியோகத்தர் ஒருவர் இம்மாதந்த கொடுப்பனவை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் குறைந்தது ஒரு பஞ்சாங்க மாதகாலம் உரிய சேவை நிலையத்தில் பணியாற்றி இருத்தல் வேண்டும்.

IV. எவரேனும் ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக ஆரம்ப விசாரணை / ஒழுக்காற்று விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அவர் இம்மாதந்த கொடுப்பனவினை பெற தகுதியற்றவர் ஆவார். அத்துடன் பின்னர் அவர் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டால் முன்னர் செலுத்தப்படாத மாதங்களுக்குரிய இடர் கொடுப்பனவுகளை வழங்க மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் மேற்குறித்த விசாரணையின் காரணமாக வேறு ஒரு உத்தியோகத்தர் அவரது கடமைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டு அவருக்கு அதற்கான மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தால் விசாரணையில் இருந்த உத்தியோகத்தர் அந்தக் காலத்திற்கான கொடுப்பனவினை பெற தகுதியற்றவர் ஆவார்.

V. வங்கி மற்றும் வங்கிச் சங்க பணிக் குழுவினர் இக் கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கு தமது சமுர்த்தி வங்கியின் கணக்குச் செயற்பாட்டு நடவடிக்கைகளை சரியான முறையில் பின்பற்றி இருத்தல் வேண்டும். அதாவது Manual முறையினை கைவிட்ட வங்கிகள் Manual கைவிட்ட பின்னர் கொடுக்கல் வாங்கல்களை உரிய முறைப்படி (2023.10.03 இல் வெளியிடப்பட்ட 2023/07 சுற்றுநிருபத்துக்கு அமைய) மேற்கொள்ளுதல் வேண்டும். Manual முறையினை கைவிடாத வங்கிகள் Manual முறையினை கைவிடுவதற்கான கோரிக்கையினை முன் வைத்திருத்தல் வேண்டும். மேலும் Manual மற்றும் கணினி வலையமைப்பு கணக்கு முறை ஆகிய இரண்டும் உரிய நெறிப்படுத்தல் ஆலோசனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

VI. சமுர்த்தி வங்கிகள் இக்கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னர் தமது முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்து அதனை தலைமையக / வங்கிச் சங்கத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். வங்கிச் சங்கங்கள் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமுர்த்தி வங்கிகளின் கடன்கள், வைப்புகள், முதலீடுகள் மற்றும் பரீட்சை மீதிகள் (சமப்பட்டமை ) தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வங்கிச் சங்கங்கள் தமது கடன்கள் மற்றும் கூட்டுக் காப்பீட்டு நிலைமைகள் தொடர்பான மாதாந்த அறிக்கையினையும் தயாரித்தல் வேண்டும்.

VII. வங்கி மற்றும் வங்கி சங்கத்திற்கு அந்த மாதத்தினுள் கிடைக்க பெறும் கணக்காய்வு விசாரணைகளுக்கு கிடைத்து 14 நாட்களுக்குள் அதற்கான பதில்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

VIII. சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் முதலீட்டக்காக சமுர்த்தி வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நிதியத்தை மூன்று நாட்களுக்குள் (காசோலை தேறிய நாளில் இருந்து ) முதலீடு செய்தல் வேண்டும். முதிர்ச்சி அடையும் முதலீடுகள் தொடர்பாக வங்கியின் கோரிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுப்பதுடன், வட்டி அறிவிப்புகளை 05 நாட்களுக்குள் வங்கிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

IX. வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் சுற்று நிருப ஆலோசணைகளின் படி நடத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

X. ஏதேனும் ஒரு சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கம் தமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்கள் / காரணங்களினால் தொடர்ச்சியாக நட்டமடைந்து வந்தால் அந்நிறுவனங்கள் தொடர்ச்சியான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நுண் நிதிப் பணிப்பாளரின் முன் அனுமதியினை ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒரு தடவை பெற்றுக் கொள்ள வேண்டும்.

XI. களப்பணியாளரகள் எனக் கருதப்படுபவர்கள் கிராம சேவையாளர் பிரிவுகளில் களக்கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை குறிக்கின்றது. இச்சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகளை பெறுவதற்கு வலயத்தின் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் செயல்திறன் மிக்க விதத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

**XII. 2025.12.31 வரை வருவாய் சம்பாத்திய கொடுப்பினைவுகள் எதனையும் பெற்றுக் கொள்வதற்கு தகுதிகளை பெறாத வங்கி / வங்கிச் சங்கங்கள் மற்றும் பிரிவுக்கு பொறுப்பான கள உத்தியோகத்தர்களுக்கு 2026 ஆம் ஆண்டில் இருந்து இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் இடர் கொடுப்பனவில் 25% மட்டும் வழங்க அனுமதிக்கப்படுகிறது.**

XIII. ஒரு வங்கிச் சங்கத்தில் கருத்திட்ட முகாமையாளர் பதவியில் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் பணியாற்றி இருந்தாலும் ஒரு கொடுப்பனவு மாத்திரமே உரித்தாகும்.

XIV. இக்கொடுப்பனவுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த கொடுப்பனவுகளை கணக்கிடுவதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ள Ms.Excel படிவத்தினை பயன்படுத்துவது கட்டாயமாகும். இந்த Ms.Excel படிவத்தினை தவிர வேறு எந்த முறையிலும் கொடுப்பனவுகளை கணக்கிடக் கூடாது. மேலும் Ms.Excel படிவத்தை பூரணப் படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட தகவல்களை வங்கிப் பரிசீலனைக்காக வரும் உத்தியோகத்தர்கள் பரிசீலனை செய்வதற்கு ஏற்ற விதத்தில் மாதாந்த அடிப்படையில் முறையாக கோவை செய்து வைத்திருத்தல் வேண்டும்.

உ+ம்:- கருத்திட்ட முகாமையாளருக்கான கொடுப்பனவுகளை செய்யும்போது இணைப்பு - 03 படிவம் மற்றும் பந்தி இலக்கம் 7.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை இணைப்புச் செய்தல் வேண்டும்.

**07. வங்கி சங்கத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பிரதானமான நியதிகளை (அளவுகோல்களை) பூரணப்படுத்தி இருந்தாலும், கீழ் குறிப்பிடப்படும் விடயங்களையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

**7.1 கருத்திட்ட முகாமையாளர்.**

I. மாதத்தினுள் சமுர்த்தி வங்கிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற ரூ. 500,000/= க்கும் மேற்பட்ட கடன் விண்ணப்ப படிவங்களுக்கான கருத்திட்ட அறிக்கைகள், மற்றும் வங்கிச் சங்கத்திற்கு கிடைக்கும் கடன் விண்ணப்ப படிவங்களுக்கான கருத்திட்ட அறிக்கைகளை தயாரித்தல், மதிப்பீடு செய்தல், சிபாரிசுகளை வழங்கல் மற்றும் முன் பின் பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.

II. வாழ்வாதாரத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு உதவுதல்.

III. குடும்ப வலுவூட்டல் தேசிய வேலைத் திட்டத்திற்குரிய திட்டங்களை தயாரித்தல், உதவிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

IV. ஒவ்வொரு மாதமும் 25 காலங்கடந்த கடன்கள், மற்றும் 05 அறவிடமுடியாக் கடன்கள் பரிசீலிக்கப்படல் வேண்டும். அவ்வாறு பரிசீலிக்கப்பட்ட கடனாளிகளின் பெயர், முகவரி, கணக்கிலக்கம் உட்பட கண்காணிக்கப்பட்ட தினத்தில் காணப்பட்ட முன்னேற்றம் என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அறிக்கையினை கொடுப்பனவினை கோரும் இணைப்பு - 03 படிவத்துடன் இணைப்புச் செய்தல் வேண்டும்.

**7.2 கருத்திட்ட உதவியாளர்.**

I. மாதத்தினுள் சமுர்த்தி வங்கிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற ரூ. 500,000/= க்கும் மேற்பட்ட கடன் விண்ணப்ப படிவங்களுக்கான கருத்திட்ட அறிக்கைகள், மற்றும் வங்கிச் சங்கத்திற்கு கிடைக்கும் கடன்விண்ணப்ப படிவங்களுக்கான கருத்திட்ட அறிக்கைகளை தயாரித்தல், கருத்திட்ட முகாமையாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்தல், சிபாரிசுகளை வழங்கல் மற்றும் முன் / பின் பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.

II. வாழ்வாதாரத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு உதவுதல்.

III. குடும்ப வலுவூட்டல் தேசிய வேலைத் திட்டத்திற்குரிய திட்டங்களை தயாரித்தல், உதவிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

IV. ஒவ்வொரு மாதமும் 25 காலங்கடந்த கடன்கள், மற்றும் 5 அறவிடமுடியாக் கடன்கள் பரிசீலிக்கப்படல் வேண்டும். அவ்வாறு பரிசீலிக்கப்பட்ட கடனாளிகளின் பெயர், முகவரி, கணக்கிலக்கம் உட்பட கண்காணிக்கப்பட்ட தினத்தில் காணப்பட்ட முன்னேற்றம் என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அறிக்கையினை கொடுப்பனவினை கோரும் இணைப்பு - 03 படிவத்துடன் இணைப்புச் செய்தல் வேண்டும்.

**7.3 சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.**

i. ஒரு மாதத்திற்கு குறைந்தது 02 மது ஒழிப்புத் திட்டங்களை கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் நடத்தி அறிக்கையிடல்.

ii. சிறுவர் கழக அங்கத்தவர்களின் செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்யும் பொருட்டு குறைந்தது 02 சிறுவர் கழகக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

iii. மதம் / கலாச்சாரம் சார்ந்த நிகழ்ச்சிகளை பிரதேச / கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் மாதாந்தம் நடத்துதல், மற்றும் அதற்கான ஆதரவுகளை வழங்குதல்.

iv. மாதாந்தம் வீட்டு முகாமைத்துவ மேம்பாட்டு திட்டங்கள் குறைந்தது இரண்டினையாவது நடத்துதல்.

v. பாடசாலை செல்ல வேண்டிய வயதில் பாடசாலை செல்லாத பிள்ளைகளை விசாரித்து அவர்களை பாடசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுத்தல். மேலும் இது குறித்த மாதாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

vi. சமூகத்தை உளவியல் ரீதியாக வலுவூட்டுவதற்கு தேவையான தகவல்களை சேகரித்தல், மற்றும் திட்டங்களை செயல்படுத்தல்.

vii. மேற்குறித்தவாறு (i - vi) முடிக்கப்பட்ட பணிகள் தொடர்பாக வலயம், பயனாளியின் பெயர், முகவரி, கணக்கிலகம் மற்றும் கண்காணிப்பு திகதியின் படி முன்னேற்றம் என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அறிக்கையினை இக் கொடுப்பனவினை பெறுவதற்கான இணைப்பு - 03 படிவத்துடன் இணைத்து வழங்குதல் வேண்டும்.

08. வலய உதவியாளருக்கு (கள உதவியாளருக்கு) மாதாந்த கொடுப்பனவை வழங்கும் போது அவருக்கு மாதாந்தம் பொறுப்பாக்கப்பட கடமைகளுக்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் முடிக்கப்பட்டு இருப்பதை அவதானித்து வங்கி முகாமையாளர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். மேலும் மாதாந்த கொடுப்பனவுகளை பெறுவதற்கான தகமைகளை பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே வங்கி அவ்உத்யோகத்தருக்கு கொடுப்பனவினை வழங்க வேண்டும்.

I. சமுர்த்தி வங்கியின் கடன் தொகையிலிருந்து செயற்படுத்தப்படும் திட்டங்களை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பித்தல்.

II. சமுர்த்தி வங்கியின் காலங்கடந்த / செலுத்த தவறிய கடனாளிகளுடன் கலந்துரையாடல் மற்றும் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல், அது தொடர்பாக அறிக்கையிடல்.

III. வலய கூட்டங்களுடன் தொடர்பான அறிக்கைகள் மற்றும் கோவைகளை பராமரித்தல்.

IV. வலுவூட்டல் திட்டத்திற்கென அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்கள் தொடர்பாக பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.

V. சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களுக்கு தேவையான தகவல்களை தயாரித்தல் மற்றும் அதனை முன் வைத்தல்.

VI. வங்கியின் பாதுகாப்பையும் மற்றும் வங்கி வளாகத்தின் தூய்மையை பராமரிப்பதற்கும் வங்கி முகாமையாளருக்கு உதவுதல்.

VII. சமுதாய அடிப்படை அமைப்புகளின் கூட்டங்கள் மற்றும் அது தொடர்பான ஏனைய கடமைகளிலும் ஈடுபடுதல்.

VIII. நிறுவன மற்றும் நிருவாக நடவடிக்கைகளில் வங்கி முகாமையாளருக்கு ஒத்துழைப்பு வழங்கல்.

IX. கள உத்தியோகத்தர்களின் முன் வேலை திட்டங்கள், நாட் குறிப்பேட்டு அறிக்கையின் சுருக்கம், கடமையின் நிமித்தம் வெளிச்செல்லல் பதிவேடு, விடுமுறை விவரங்கள் போன்றவற்றை உரிய முறையில் செயற்படுத்தல்.

X. சிறு குழுக்களின் பொதுக் காசுப் புத்தகத்தை பரிசீலனை செய்தல் மற்றும் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தல்.

XI. ஒவ்வொரு மாதமும் 25 காலங்கடந்த கடன்களையும், மற்றும் 05 அறவிட முடியாக் கடன்களையும் பரிசீலனை செய்தல். அத்துடன் அக்கடனாளியின் பெயர், முகவரி, கணக்கிலக்கம், பரிசீலனை செய்த திகதியில் முன்னேற்றம் என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அறிக்கையினை இக்கொடுப்பனவு விண்ணப்பம் இணைப்பு - 01 படிவத்துடன் இணைத்து சமர்ப்பித்தல்.

09. உரிய மாதத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகளையும் நியதிகளையும் அந்த மாதத்தில் பூர்த்தி செய்யாது பின்னர் அதனை பூர்த்தி செய்தால் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியாது. இருப்பினும் சில விசேட சந்தர்ப்பங்களில் முந்திய மாதத்திற்கான கொடுப்பனவுகளை வழங்க வேண்டுமாயின் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் சிபாரிசுடன் மற்றும் நுண்நிதிப் பணிப்பாளரின் அனுமதியினை பெற்று நடப்பு நிதியாண்டில் கொடுப்பனவு செய்ய முடியும். டிசம்பர் மாதத்திற்கான கொடுப்பனவுகள் மாத்திரம் உரிய படிவங்களுக்கான அனுமதியினை பெற்ற பின்னர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் கணக்குகளில் வரவு வைத்து கொடுப்பனவுகளை வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

10. பதில் கடமை / கடமை நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு விசேட மாதாந்த கொடுப்பனவு வழங்கல்.
வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களில் வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்கு பதில் கடமைக்கு / கடமை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர் ஒருவர் சட்டபூர்வமாக நியமிக்கப்பட்டால் அவருக்கு இம்மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும். அந்த வகையில் ஒருவருக்கு தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஒரு பதில் கடமை பதவிக்கு மாத்திரமே கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.

11. மாதாந்த கொடுப்பினைவுத் தொகை தொடர்பான நியதிகள் / நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை கீழ் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்கள் உறுதி செய்த பின்னரே அதனை வழங்க வேண்டும்.

| விபரம் | உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் படிவம் | உறுதிப்படுத்த வேண்டிய திகதி | உறுதிப்படுத்த வேண்டிய உத்தியோகத்தர். |
|---|---|---|---|
| சமுர்த்தி வங்கி | இணைப்பு -01 | அடுத்து வரும் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் | வங்கிச்சங்க முகாமையாளர் |
| வலய உதவியாளர் (களம்) | இணைப்பு - 01 மற்றும் சுற்றறிக்கையின் 8 வது பந்தியின் படி உறுதிப்படுத்தல் ஆவணங்கள். | அடுத்து வரும் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் | வங்கி முகாமையாளர் |
| களக்கடமைச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | இணைப்பு - 02 | அடுத்து வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் | வங்கி முகாமையாளர் |
| சமுர்த்தி வங்கிச் சங்கம் | இணைப்பு - 03 | அடுத்து வரும் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் | மாவட்ட சமுர்த்தி பண்ணிப்பாளர் |
| கருத்திட்ட முகாமையாளர் | இணைப்பு - 03 மற்றும் சுற்றறிக்கையின் 7.1 பந்தியின் படி உறுதிப்படுத்தல் ஆவணங்கள் | அடுத்து வரும் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் | வங்கிச்சங்க முகாமையாளர் |
| கருத்திட்ட உதவியாளர் | இணைப்பு - 03 மற்றும் சுற்றறிக்கையின் 7.2 பந்தியின் படி உறுதிப்படுத்தல் ஆவணங்கள் | அடுத்து வரும் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் | வங்கிச்சங்க முகாமையாளர் |
| சமூக அபிவிருத்தி உதவியாளர் | இணைப்பு - 03 மற்றும் சுற்றறிக்கையின் 7.3 பந்தியின் படி உறுதிப்படுத்தல் ஆவணங்கள் | அடுத்து வரும் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் | வங்கிச்சங்க முகாமையாளர் |

சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஒருவர் வங்கி சங்கத்தில் அல்லது வங்கிச் சங்க முகாமையாளர் ஒருவர் சமுர்த்தி வங்கியில் பதில் கடமையாற்றும் போது அதற்கான உறுதிப்படுத்தல்களை தலைமையக முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் வங்கிச் சங்க முகாமையாளரே கருத்திட்ட முகாமையாளராக பதில் கடமையாற்றும் போது தலைமையாக முகாமையாளரிடமிருந்தும், தலைமையக முகாமையாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் மாவட்ட சமுர்த்தி பனிப்பாளரிடம் இருந்தும் உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**12. கொடுப்பனவு செய்தல் தொடர்பான கணக்குப்பதிவுகள்.**

வழங்கப்படும் கொடுப்பனவுகள் உத்தியோகத்தரின் தனிப்பட்ட அங்கத்தவர் அல்லாதோர் / திரியமாதா / தனசக்தி சேமிப்பு கணக்குகளின் ஊடாக வழங்கப்பட வேண்டும். அதற்கான கணக்குப் பதிவுகள் வருமாறு.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள்

செலவு கணக்கு - பணிக் குழுவினருக்கான கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச் செலவுகள் கணக்கு - பற்று (குறியீட்டு இலக்கம் - 2113)

திரியமாதா/ அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்பு கணக்கு. - வரவு

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம்

செலவுக் கணக்கு - பணிக் குழுவினருக்கான கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச் செலவுகள் கணக்கு - பற்று (குறியீட்டு இலக்கம் - 6203)

சிரமசக்தி சேமிப்புக் கணக்கு. - வரவு

13. வார இறுதி நாட்களில் கடமையில் ஈடுபடுதல் மற்றும் விடுமுறை நாட்சம்பளம் பெற்றுக் கொள்ளல்.

சமுர்த்தி வங்கியில் மாதம் ஒன்றில் கூடியது 03 வார இறுதி / பொது விடுமுறை தினங்களில் கடமைகளில் ஈடுபட முடியும். இதற்கான விடுமுறை நாட்சம்பளத்தை சமுர்த்தி வங்கியின் நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளவும் முடியும். வார இறுதி / பொது விடுமுறை தினங்களில் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் கீழ் வருமாறு அமையும்.

13.1 முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் - முதல் வாரத்தின் சனி / ஞாயிறு

13.2 ஏனைய வார இறுதி / பொது விடுமுறை தினங்களில்

I. சேமிப்புகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை அடையாளம் காணுதல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்.

II. செயற்படாத கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத பங்கு கணக்குகளை வைத்திருக்கும் நபர்களை அடையாளம் கண்டு அவர்களை செயற்பாடுள்ள பங்காளர்களாகவும்/ கணக்கு உடையவர்களாகவும் மாற்ற நடவடிக்கை எடுத்தல்.

III. அஸ்வெசும வலுவூட்டல் திட்டத்தின் கீழ் வலுவூட்டுவதற்காக அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் பெயர் பட்டியல் கோவைகளை தயாரித்தல், அவர்களுக்கான வருமானம் ஈட்டும் கருத்திட்டங்களை அடையாளம் காணுதல், அவர்கள் கடன்களை பெற்றுக் கொள்வதற்கான தகுதிகளை நிறைவு செய்தல்.

IV. வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் உளவள மற்றும் சமூக ரீதியான வலுவூட்டல் துறைகள் தொடர்பான திட்டங்களை செயற்படுத்தல்.

V. அறவிடமுடியாக் கடன்கள்/ காலங்கடந்த கடன்களை மீள் அறவீடு செய்தல் தொடர்பான கடமைகள்.

VI. சமுர்த்தி வங்கியின் கடன்களை விடுவிப்பதற்குரிய கோவைகளை தயார் படுத்தல் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பான பணிகளில் ஈடுபடல்.

VII. அடுத்த மாதத்திற்கு / காலாண்டுக்குரிய கடன் செயற்பாட்டு திட்டமிடலை தயாரிப்பதற்கான கடமைகள்.

VIII. சமுர்த்தி வங்கி, வங்கி சங்கத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் என்பவற்றின் கூட்ட அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் கோவை படுத்தலுடன் தொடர்புபட்ட பணிகள்

IX. வங்கி வளாகத்தின் உள்ளக / வெளியக பாதுகாப்பு மற்றும் சுத்தப்படுத்தல் பணிகள்.

X. மென்பொருள் ஊடாக சேமிப்பு வைப்புகளுக்கு வட்டி வரவு வைத்தல், கணினி மென்பொருளுடன் தொடர்புடைய பொறுப்பாக்கப்பட்ட விசேட பணிகளை மேற்கொள்ளல். (வார இறுதி / பொது விடுமுறை தினங்களை பயன்படுத்த கோரும் சந்தர்ப்பங்களில்).

13.3 பிரயாணச் செலவுகள், பைமேல்/ மேலதிகநேர கொடுப்பனவுகள் தொடர்பாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்கு சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கங்களின் நிதி அதிகாரங்கள் மற்றும் நிதி எல்லைகள் தொடர்பான அதிகாரம் வழங்கல் சுற்றறிக்கை ஆலோசனைகளை பின்பற்றுதல் வேண்டும். மேலும் விடுமுறை தினங்களில் கடமைகளை மேற்கொள்வதற்கான முன் அனுமதியினை வங்கிகள் வங்கிச்சங்க முகாமையாளரிடம் இருந்தும், வங்கிச் சங்கங்கள் மாவட்ட பணிப்பாளர் / பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

13.4 பணப்பெட்டியின் திறப்பு பாவனைக் கொடுப்பனவு தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 2024/10 இலக்க சுற்று நிருபம் இத்தால் ரத்து செய்யப்படுவதுடன், இதன் பின்னர் திறப்புப் பாவனைக்கான கொடுப்பனவு கீழ்வரும் விதத்தில் வழங்கப்படல் வேண்டும்.

| **பதவி** | **வங்கி** | **வங்கிச் சங்கம்** |
|---|---|---|
| முகாமையாளர் (வங்கி மற்றும் வங்கிச் சங்கம்) | 1500/= | 1250/= |
| உதவி முகாமையாளர் | 1500/= | 1250/= |
| காசாளர் | 1500/= | 1250/= |

.

சி. டி. களுஆராச்சி
பணிப்பாளநாயகம்,

**பிரதிகள் :**

1. செயலாளர் , கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் / மேலதிக பணிப்பாளர் நாயகம் , மாவட்ட செயலகம் - உ.ந.பொ
3. பிரதான கணக்காளர், சமு.அபி.திணைக்களம் - உ.ந.பொ
4. பிரதம உள்ளக கணக்காய்வாளர், சமு.அபி.திணைக்களம் - உ.ந.பொ
5. உதவி பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பம், சமு.அபி.திணைக்களம் - உ.ந.பொ
6. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் - உ.ந.பொ
7. பிரதேச செயலாளர்,பிரதேச செயயலகம் - தகவலுக்ககவும், உ.ந.பொ
8. மாவட்ட பிரதி/ உதவி பணிப்பாளர், மாவட்ட செயலகம் - உ.ந.பொ
9. தலைவர் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சமாசம் - தகவலுக்காக

Translate by :-
I. Aliyar
District Director ( Ret.)

# சமுர்த்தி வங்கியின் மாதாந்த கொடுப்பனவை பெற்றுக்கொள்ளல்

**இணைப்பு - A (வங்கி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு கோரிக்கை)**

சமுர்த்தி வங்கி :- வருடம்/ மாதம் :-

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொடுப்பனவு விவரம் | கொடுப்பனவின் தன்மை/ வீதம் | முகாமையாளர் | உதவி முகாமையாளர் | புத்தகக் காப்பாளர் | கணக்கு எழுதுனர் - i | கணக்கு எழுதுனர் - ii (கடன்) | கணக்கு எழுதுனர் - iii (கடன்) | வலய/ கள உதவியாளர் | மொத்தம் |
| இடர் கொடுப்பனவு (4.1) | | | | | | | | | |
| தேறிய இலாபம் (4.2.1) | | | | | | | | | |
| வைப்புகளுக்கான கடன் வீதம் (4.2.2.1) | | | | | | | | | |
| அறவிடமுடியாக் கடன் வீதம் (4.2.3) | | | | | | | | | |
| காலங்கடந்த கடன் வீதம் (4.2.4) | | | | | | | | | |
| வைப்புகளின் அதிகரிப்பு (4.2.5) | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | |
| உத்தியோகத்தரின் பெயர் | | | | | | | | | |
| கையொப்பம். | | | | | | | | | |

| தயாரித்தவரின் | பரிசீலனை செய்தவரின் | முகாமையாளரின் | வங்கிச்சங்க முகாமையாளர் அனுமதித்த திகதி. |
|---|---|---|---|
| பெயர் : | பெயர் : | பெயர் : | |
| பதவி : | பதவி : | கையொப்பம்: | |
| கையொப்பம்: | கையொப்பம்: | திகதி : | படிவம் - 1 மற்றும் ஏனைய இணைப்புகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| திகதி : | திகதி : | பதவி முத்திரை | |

குறிப்பு:- இச்சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள Ms.Excell தரவேற்றத்தின் ஊடாக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் உரித்தான மாதாந்த கொடுப்பனவுத் தொகையினை இணைப்பு -1 இன் ஊடாக கணித்து வழங்குவதுடன் அதனை பயன்படுத்தியே இப்படிவத்தினை மேற்குறித்த விதத்தில் பூரணப்படுத்தல் வேண்டும். செலவுக்கான அனுமதி/ தழுவல் அனுமதியினை கட்டுப்பாட்டுச் சபையில் இருந்து ஒவ்வொரு பக்கத்திலும் பெற்று மாதாந்த கொடுப்பனவு கோவையில் கோவையிடல் வேண்டும். மேலும் அதன் பிரதியினை கொடுப்பனவு வவுச்சருடன் இணைத்தல் வேண்டும்.

## சமுர்த்தி வங்கியின் களப்பணிகுழுவினருக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கல்.

**இணைப்பு - B ( கள உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு)**

சமுர்த்தி வங்கி :- வருடம் / மாதம் :-

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் பெயர் | இடர் கொடுப்பனவு (4.1) | தேறிய இலாபம் (4.2.1) | வைப்புகளுக்கான கடன் வீதம் (4.2.2.2) | அ.மு. கடன் வீதம் (4.2.3) | காலங்கடந்த கடன் வீதம் (4.2.4) | சேமிப்பு அதிகரிப்பு (4.2.5) | விசேட கொடுப்பனவு (4.2.6) | மொத்தம் | கையொப்பம் |
| 1 | கொடுப்பனவின் தன்மை/ வீதம் | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | |

| தயாரித்தவரின் | பரிசீலனை செய்தவரின் | முகாமையாளரின் | கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி/ தழுவல் |
|---|---|---|---|
| பெயர் : | பெயர் : | பெயர் : | அனுமதி வழங்கிய திகதி. 20 |
| பதவி : | பதவி : | கையொப்பம்: | |
| கையொப்பம்: | கையொப்பம்: | திகதி : | படிவம் - 2 மற்றும் ஏனைய இணைப்புகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| திகதி : | திகதி : | பதவி முத்திரை | |

குறிப்பு:- இச்சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள Ms.Excell தரவேற்றத்தின் ஊடாக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் உரித்தான மாதாந்த கொடுப்பனவுத் தொகையினை இணைப்பு -1 இன் ஊடாக கணித்து வழங்குவதுடன் அதனை பயன்படுத்தியே இப்படிவத்தினை மேற்குறித்த விதத்தில் பூரணப்படுத்தல் வேண்டும். செலவுக்கான அனுமதி/ தழுவல் அனுமதியினை கட்டுப்பாட்டுச் சபையில் இருந்து ஒவ்வொரு பக்கத்திலும் பெற்று மாதாந்த கொடுப்பனவு கோவையில் கோவையிடல் வேண்டும். மேலும் அதன் பிரதியினை கொடுப்பனவு வவுச்சருடன் இணைத்தல் வேண்டும்.

# சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் மாதாந்த கொடுப்பனவு வழங்கல்

**இணைப்பு - C ( வங்கிச்சங்க உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு கோரிக்கை)**

சமுர்த்தி வங்கிசங்கம் :- வருடம் / மாதம் :-

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொடுப்பனவு விவரம் | கொடுப்பனவின் தன்மை / வீதம் | முகாமையாளர் | கருத்திட்ட முகாமையாளர் | உதவி முகாமையாளர் | நிர்வாக உதவியாளர் | கணக்கு/ நிதி உதவியாளர் | கருத்திட்ட உதவியாளர் | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் | மொத்தம் |
| இலாபத்துக்குரிய கொடுப்பனவு (5.1) | | | | | | | | | |
| தேறிய இலாபம் (5.3.1) | | | | | | | | | |
| மொத்த அறவிட வேண்டியுள்ள கடன்கள்(5.3.2) | | | | | | | | | |
| செயல்படாத (அளவிடமுடியாத) கடன் வீதம் (5.3.3) | | | | | | | | | |
| காலங்கடந்த கடன் வீதம் (5.3.4) | | | | | | | | | |
| கூட்டுத்தொகை | | | | | | | | | |
| உத்தியோகத்தர் பெயர் | | | | | | | | | |
| கையொப்பம் | | | | | | | | | |

| தயாரித்தவரின் | பரிசீலனை செய்தவரின் | முகாமையாளரின் | மாவட்ட பணிப்பாளர்/ பிரதி /உதவி பணிப்பாளரால் அனுமதி வழங்கிய திகதி. 20 |
|---|---|---|---|
| பெயர் : | பெயர் : | பெயர் : | |
| பதவி : | பதவி : | கையொப்பம்: | |
| கையொப்பம்: | கையொப்பம்: | திகதி : | படிவம் - 3 மற்றும் ஏனைய இணைப்புகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| திகதி : | திகதி : | பதவி முத்திரை | |

குறிப்பு:- இச்சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள Ms.Excell தரவேற்றத்தின் ஊடாக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் உரித்தான மாதாந்த கொடுப்பனவுத் தொகையினை இணைப்பு -1 இன் ஊடாக கணித்து வழங்குவதுடன் அதனை பயன்படுத்தியே இப்படிவத்தினை மேற்குறித்த விதத்தில் பூரணப்படுத்தல் வேண்டும். செலவுக்கான அனுமதி/ தழுவல் அனுமதியினை கட்டுப்பாட்டுச் சபையில் இருந்து ஒவ்வொரு பக்கத்திலும் பெற்று மாதாந்த கொடுப்பனவு கோவையில் கோவையிடல் வேண்டும். மேலும் அதன் பிரதியினை கொடுப்பனவு வவுச்சருடன் இணைத்தல் வேண்டும்.